Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 215/2024

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | பேக்கரி கடை |
| பெயர். | - | பாக்கியராஜ் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | மனோகரன் | சமயம் | - | |
| கிராமம் | - | திருவெண்ணெய்நல்லூர் | வயது | - | 42 |

16.07.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது திருவெண்ணெய்நல்லூரில் வசித்து பேக்கரி கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மதிய வேலையில் நான் கடையில் இருந்த போது சத்தம் கேட்டது, நான் வெளியே வந்து பார்த்த போது ஒரு லாரி ஒருவர் மீது மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. இந்த விபத்தில் இறந்துபோன தெய்வமணி என்பவரை தெரியாது. எதிரியை தெரியாது. விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 04.05.2023 ம் தேதி மதியம் 12.45 மணியளவில் நான் எனது கடையில் இருந்தேன் என்றாலும், அப்போது தெய்வமணி பேருந்து ஏறுவதற்காக பெரியசெவலை அருகே நின்றுகொண்டிருந்தார் என்றாலும், அப்போது மடப்பட்டிலிருந்து திருக்கோவிலூர் வழியாக வந்த TN28AA9533 என்ற லாரியை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து தெய்வமணி மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றாலும், மேற்படி விபத்தை நான் நேரடியாக பார்த்துவிட்டு, தெய்வமணியை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தை நேரடியாக பார்த்ததாக போலீசார்

விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.